நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டதா என்பது' வழங்கப்பட வில்லை. பொதுப்பணித் துறை எவ்வளவு நட்டஈட்டுத் தொகை தரவேண்டுமோ அதை வருவாய்த்துறையிடம் ஒப்படைத்து, விசாரணையை விரைவாக நடத்தி அதை வழங்கவேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கபபெறுகிறது.

பொங்காலை கோம்பை ஏரித் திட்டம்.

*வினா எண். 14—திரு. வெ. அரங்கராசன்

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் — கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியில் 'பொங்காலை கோம்பை ஏரி கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது.

(இ) எப்போது பணி துவங்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ), (ஆ) மற்றும்) (இ) துறையூர் வட்டம் பொங்காலை வட்டம் கிராமத்தில் சுமார் 480 ஏக்கர் புதிய நிலப் பரப்புக்கு பாசனம் அளிக்க குளம் அமைக்கும் திட்டம் பொதுப்பணித் துறையின் தல அதிகாரிகள் ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 10.00)

திரு. வெ. அரங்கராசன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நிலப்பரப்பை எடுத்து ஆய்வில் உள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். பணி எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இந்த திட்டத்திற்குச் சுமார் 7.47 லட்சம் ரூபாய் செலவாகும் என்று இப்பொழுது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கிறது. தலைமைப் பொறியாளருடைய அனுமதி பெற்று பிறகு விரைவாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS